# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 15.11.2022 supeedsam.com supeedsam@gmail.com





## 2023 வரவு செலவுத் திட்டம்:

# பொருளாதார நெருக்கடிகள் ஓரளவுக்கு தளர்த்தப்பட்டுள்ளது



கடந்த சில மாதங்களாக நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் ஓரளவுக்கு தளர்த்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நாடாமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்கள் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவது தொடர்பில் நம்பிக்கையளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் அவர்கள் முன்வைத்த பொருளாதார சீர்திருத்தங்கள் முழுமையாக

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ்க் கட்சிகள் வேற்றுமைகளை மறந்து ஜனாதிபதியுடன் இணைய வேண்டும்



தேசிய பிரச்சினை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க இந்த சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறவிடக்கூடாது என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் இந்த சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது என்பதோடு, வேற்றுமைகளை மறந்து ஜனாதிபதியுடன் உரையாற்ற வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் அன்றும் சரி, இன்றும் சரி தேசிய பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் தாம் ஒரே நிலைப்பாட்டில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எரிபொருளுக்கு மேலதிக வரி விதிக்க அரசாங்கம் இணக்கம்!

எரிபொருளுக்கு மேலதிக வரி விதிக்க வரவு செலவுத் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்று திங்கட்கிழமை சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி இறக்குமதியின் போது இந்த மேலதிக கட்டணம் வசூலிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.

அதன்படி டீசல் மற்றும் கச்சா எண்ணெய், பெட்ரோல் மீது இந்த புதிய மேலதிக வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## கஞ்சா குறித்து மனம் மகிழ்ந்தார் டயானா



இலங்கையில் கஞ்சாவை வளர்ப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாக இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

மருத்துவ மூலிகையின் மதிப்பை ஜனாதிபதி உணர்ந்திருப்பது குறித்து தான் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் பல வேலை வாய்ப்புகளை வழங்கக்கூடிய தொழில் என்பதால், தான் அதை விளம்பரப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

கஞ்சா செய்கை மூலம் இரண்டு பில்லியன் டொலர்களுக்கு மேல் பெறுமதியான முதலீடுகளை அடுத்த வருடம் கொண்டு வருவதற்கு தான் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

## சம்பந்தன் தலைமையில் இன்று தமிழ் கட்சிகளுக்கு இடையில் சந்திப்பு!



தமிழ் கட்சிகளுக்கு இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30க்கு இடம்பெறவுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் குறித்த சந்திப்பானது, கொழும்பில் உள்ள சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த சந்திப்புக்கு அனைத்து தமிழ் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

இதன்போது, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கிழக்கு ஆளுனர் வியட்னாம் தூதுவர் சந்திப்பு



கிழக்கு மாகாணத்தின் வர்த்தகர்கள் மற்றும் வியட்நாம்–இலங்கைத் தூதுவர் திருமதி ஹோ தி தான் ட்ரூக் மற்றும் மாகாண ஆளுநர் அனுராதா யம்பத் ஆகியோர் தலைமையில் வியட்நாம் –இலங்கை வர்த்தக உச்சி மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் பாசிக்குடா அமயா பீச் ஹோட்டல் வளாகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தில் வியட்நாம் வர்த்தகர்களுக்கு புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் குறித்து நீண்ட கலந்துரையாடல்

02 ஆம் பக்கத்தில்...

## மோட்டுக்கு உயிர் கொடுத்த ரணில் - தரமான பட்ஜெட் என்கிறது மோட்டுக்கட்சி

பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்குண்டுள்ள நாடு மற்றும் நாட்டின் பொருளாதாரத்திற்கு உயிர் கொடுக்கும் ஒரு புதிய உந்து சக்தியாக ஜனாதிபதியின் புதிய வரவு - செலவுத் திட்டம் அமைந்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனை அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக நாம் பல்வேறு

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen



"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302



Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598

25605: cicero


## மக்களுக்கு இனி ரீயும் இல்லை சாப்பாடும் இல்லை



'நிதி அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரவு - செலவுத் திட்ட உரையில் காணப்படுகின்ற, தோட்ட தொழிலாளர்கள் மற்றும் கொழும்பு மாநகர பாமர மக்கள் தொடர்பிலான அலட்சியப்போக்கு எம்மை ஏமாற்றமடையச் செய்துள்ளது.'

- இவ்வாறு கொழும்பு மாவட்ட எம்.பியான தமிழ் முற்போக்குக் கூட்டணியின்

02 ஆம் பக்கத்தில்...

# அகில இலங்கை சிவத்தொண்டர் பேரவை அங்குரார்ப்பணம்









**(இக்பால் அலி, இரா அ. இராமன்)**

வேறு விவகாரங்களில் சிக்கிக் கொண்டு காலத்தை வீண்விரயம் செய்யாமல் தன்னுள்ளத்திலுள்ள வினைகளை தாங்களே தேட வேண்டும் என்ற படித்தரம் தான் இந்த சிவத் தொண்டுப் பேரவை ஆரம்பிக்கப்பட்டன் நோக்கமாகும் என்று ஒவுஸ்ட்ரேலியா நாட்டிலுள்ள உலக சைவ தமிழ் ஒன்றியத்தின் தலைவர் இளங்கோவன் தெரிவித்தார்.

கண்டி மொரகஹமுல ஸ்ரீமுருன் தேவஸ்தானமும் கண்டி தமிழ் வர்த்தக சங்கமும் இணைந்து செஅகில இலங்கை சிவத்தொண்டர் பேரவை அங்குரார்ப்பணம் ய்து வைக்கும் வைபவமும் பொருளாதார நெருக்கடியான சூழலிலிருந்து இலங்கையை மீண்டெழச் செய்யும் விசேட சமய விழிபாடும் ஸ்ரீமுருகன் தேவஸ்தானத்தின் அறங்காவலர் சபையின் செயலாளர் ரன்ஜிதா பழனியப்பன் மற்றும் தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்பழகன் ஆகியோர்களின் தலைமையிலும் கோயிலின் பொருளாளர் பெரியையா செல்லையாவின் வழிகாட்டலுடன் நடைபெற்றது. அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது; நாங்கள் யாவரும் சிவத் தொண்டர்கள். சிவனைத் தியானம் செய்பவர்கள். சிவனை நோக்கியே நாங்கள் கல்வி, துதி, ஞானம் யோகம் நான்கு படித்தரங்களிலும் போய்க் கொணடிருக்கிறோம். அதனால் தான் சணாதன தர்மம். அதாவது சணாதன தர்மம் என்றால் அது கிழே இறங்கும் மேலே போகும். அது அலைமாதரியாகும். இந்து சமயத்துடைய வரலாற்றைப் பார்க்கும் போது அது தெரிய வரும். எந்தவொரு காலத்திலும் அது விழுந்தது இல்லை. இதை வேறு அந்நிய மதத்திலுள்ளவர்கள் பிடித்து விட்டாரோ போய் விட்டாரோ என்று நிறையப் பேர் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் முதலில் செய்ய வேண்டியது. தம் பெருமைதான் அறியார் தன்மையர் என்று திருநாவுக்கரசனார் சிவபெருமானிடம் கூறுகிறார். எங்களுடைய பெருமை சைவ சயமத்தில் பிறந்து வளர்ந்தது பெரிய பாக்கியம் என்பது யாருக்கும் தெரியாது. ஆதலால் யாரோ வந்து புத்தகங்களையும் ஆடையும் கொடுப்பதால் அதனை யாராலும் அழிக்க முடியாது. இதன் ஆழம் தெரியாமல் இருப்பது தான்பிரச்சினையே ஒழிய பிரச்சினைக்குரிய தீர்வு எங்களிடம் தான் இருக்கிறது.

எந்தவிதமான ஆழமும் இருக்கிற இல்லையா என்று தெரியாமல் வெளி விவாரகங்களிலுள்ள பிரச்சினைகளை நாங்கள் கூடுதலாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். உள்ளே இருக்கின்ற இறைவனை நாங்கள்தான் தேட வேண்டும். அதை விட்டு வெளியுலகிற்குள் சென்று அங்கே முரண்பட்டுக் கொண்டிருந்தால் இவை கடைசி மட்டும் முடிவுக்கு வராது. இதனால் தான் பல சிக்கல்கள். மெய் அடியார்களின் தொண்டையும் பெருமையை அறியாமல் வெவ்வேறு விடயங்களில் சிக்கிக் கொண்டு செயற்பட முடியுமா என்று அவெளய்யார் தம் பாடலில் கேள்வி எழுப்புகிறார்.

இதில் இலங்கை தொழிலாளர் காங்கிஸின் உப தலைவரும் நகர மற்றும் வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி மலேசியா நாட்டு அகில உலக சைவ ஒன்றியத்தினுடைய பிரதிநிதி முனியாண்டி சடையாண்டி , இந்தியா தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அகில உலக சைவ ஒன்றியத்தின் பிரதிநிதி தமிழ்வேல் நகர மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அதிகார சபையின் பணிப்பாளர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர். பிரஜா சக்தியின் இயக்குனர் சட்டத்தரணி பாரத் அருள்சாமி , சுவாமி கணபதி யோகி உலக நாட்டு சைவ ஒன்றியத்தின் இலங்கைக்கான செயலாளர் ஊடகவியலாளர் தியாகு, வர்த்தக சங்கப் பிரமுகர்கள் கோயில் அறங்காவலர் சபையின் உறுப்பினர்கள மற்றும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சைவத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# தேசிய மற்றும் மாகாண மட்ட சாதனையாளர்களுக்கு அமோக வரவேற்பளித்த மருதமுனை ஹம்ரா !








**(நூருல் ஹுதா உமர்)**

கல்முனை கல்வி வலய மருதமுனை கமு /கமு/ அல்- ஹம்றா வித்தியாலயத்திலிருந்து சென்று தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் சாதித்த மாணவர்களுக்கு வரவேற்பளித்து பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஐ. உவைதுல்லாஹ்வின் தலைமையில் நேற்று 14) பாடசாலை திறந்தவெளி அரங்கில் இடம்பெற்றது.

தேசிய மட்ட பேச்சுப்போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற முஹம்மட் வலீத் பாத்திமா ஜெஸ்னா, மாகாண மட்ட சமூக விஞ்ஞான போட்டியில் முதலிடம் பெற்ற எஸ்.எம். அபாப், ஏ.எஸ். ஹயானி, சதுரங்க போட்டியில் தனிப்பிரிவில் முதலிடம் பெற்ற எம்.எஸ். ஆயிஷா, ஆங்கில தினப்போட்டியில் மாகாணத்தில் இரண்டாமிடத்தை பெற்ற எம்.அனுபா ஆகியோரை பாடசாலை சமூகம் வரவேற்பளித்து நினைவுச்சின்னங்கள், பரிசில்கள், பணப்பரிசு, சான்றிதழ்கள், பதக்கங்கள் அணிவித்து பாராட்டி கௌரவித்தது.

இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவரும், கல்முனை வலயக்கல்வி அலுவலக பணிப்பாளருமான எம்.எஸ்.எஸ். நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவி கல்விப்பணிப்பாளர் கே.குணசேகரன், ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி ஏ.எல். சஹாப், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர் பீ.எம். நஸ்ருதீன், தேசிய மட்ட பேச்சுப்போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற முஹம்மட் வலீத் பாத்திமா ஜெஸ்னாவின் தந்தையும் உள்ளூராட்சி செயற்திட்ட ஆலோசகருமான எம்.ஐ.எம். வலீத், அவரின் பாரியார் உட்பட பாடசாலை பிரதியதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களிலும் பல்வேறு சாதனைகளை புரிந்து அண்மையில் தேசிய மட்ட பேச்சுப்போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றிருந்த முஹம்மட் வலீத் பாத்திமா ஜெஸ்னாவின் உரையும் இந்நிகழ்வில் இடம் பெற்றது சிறப்பம்சமாகும்.




# கிழக்கு ஆளுனர் வியட்னாம் தூதுவர் சந்திப்பு

இடம்பெற்றது. மேலும், கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூர் வர்த்தகர்கள் வியட்நாமில் செய்யக்கூடிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் பேசப்பட்டது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு பொருட்களை வியட்நாமுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் வியட்நாமிய முதலீட்டாளர்களுக்கு இயன்றளவு வசதிகளை வழங்குவதாக ஆளுநர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பிற்கு முன்னதாக, அதே ஹோட்டல் வளாகத்தில் ஆளுநருக்கும் வியட்நாம் தூதுவருக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்றும் இடம்பெற்றதுடன், இரு நாடுகளின் சுற்றுலா, பொருளாதார மற்றும் கலாசார விடயங்கள் பலவும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, காத்தான்குடி நகர சபை தலைவர் எஸ்.எச்.எம்.அஸ்வர், கிழக்கு மாகாண வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் ஹரி பிரதாப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மொட்டுக்கு உயிர் கொடுத்த ரணில் - தரமான பட்ஜெட் என்கிறது மொட்டுக்கட்சி

சவால்களுக்கு முகங் கொடுக்க நேரிட்டது.

நாடு என்ற வகையில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு நமக்குள்ளது. இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்படவுள்ள வரவு செலவு திட்டத்திற்கு கட்சி என்ற வகையில் நாம் எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

மேலும் நாம் ஜனாதிபதி சந்தித்த போது இறக்குமதி பொருட்கள் மீது விதிக்கப்படவுள்ள வரி தொடர்பில் மீளவும் ஆராயுமாறு கூறினோம். தற்போது பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்துள்ளது.

கொவிட் தொற்று காரணமாக பல்வேறு நாடுகள் பொருளாதார சிக்கல்களை எதிர்கொண்டு இருந்தது, ரஷ்யா-யுக்ரைன் போர் சூழல் காரணமாக இதன் காரணமாக இலங்கையும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் தற்போது உணர்ந்துள்ளார்கள்.

மேலும் புதிய வரவு -செலவுத் திட்டத்தின் ஊடாக நாட்டு மக்களுக்கு நிவாரணம் பெற்று கொடுக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். குறிப்பாக உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் அரசாங்கம் என்ற வகையில் எரிபொருட்களின் விலையை அதிகரிக்கவில்லை.

இதனை புரிந்து கொள்ளாத மக்கள் வீதியில் இறங்கி போராடினார்கள் அரசாங்கத்திற்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டனர். நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் நாட்டு மக்களே நிராகரித்தார்கள்.

இந்நிலையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியிடம் நிவாரணங்கள் வழங்குமாறு கூறவில்லை.

நாம் பொருளாதார நெருக்கடியில் மீண்டும் மீளுவதற்கு ஆலோசனைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் மாத்திரமே முன்னெடுத்து செல்வது தொடர்பில் மாத்திரமே கலந்துரையாடி வருகிறோம். மேலும் நிவாரணங்கள் வழங்குவதற்கு இது பொருத்தமான நேரம் இதுவல்ல. வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பித்தல் மற்றும் அமைச்சு பதவிகள் நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதியால் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும். அதனை ஜனாதிபதி முறையாக செயல்படுத்துவார்.

மேலும் வரவு- செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு ஆதரவினை பெற்றுக் கொள்வதற்கு கடும் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்காது என்று கருதுகிறோம். எங்களுடைய தரப்பினர் நாட்டினுடைய பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் இதனை பொறுப்புணர்ந்து செயற்படுவார்கள்.

அதனை விடுத்து எதிர்க்கட்சியினரின் ஆதரவை பெற வேண்டிய தேவை ஏற்படாது என்று கருதுகிறேன் என்றார்.

# மக்களுக்கு இனி ரீயும் இல்லை சாப்பாடும் இல்லை

தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இன்றைய வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

”உலக வங்கி, ஐ.நா. நிறுவனமான உலக உணவு திட்டம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றால், உணவின்மை மற்றும் வறுமை ஆகிய விடயங்களில் இலங்கையிலேயே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பின்தங்கிய பிரிவினராகப் பெருந்தோட்ட மக்கள் மற்றும் மாநகர பாமர மக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தப் பின்தங்கிய பிரிவினருக்கான விசேட ஒதுக்கீட்டு திட்டங்களை ஜனாதிபதி அறிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டார். ஆனால், அது நடைபெறவில்லை. உடனடியாக நிவாரணத் திட்டங்கள் இல்லாவிட்டாலும் கூட, இம்மக்களின் இக்குறைபாடுகள் பற்றி தான் அறிந்துள்ளேன் என்பதை ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டு கூறி இருக்க வேண்டும். அப்படியாயின், இந்த நலிவடைந்த மக்களை அது ஓரளவு சாந்தப்படுத்தி இருக்கும்.

தமது பிரச்சினைகள் பற்றி ஆளுகின்ற அரசு அறிந்து வைத்துள்ளது என்பதை அறிந்து மக்கள் சற்று நம்பிக்கை அடைந்து இருப்பார்கள். தீர்வுகள் தாமதமாகி வரும் என ஆறுதல் அடைந்து இருப்பார்கள்.

ஆனால், உயிருள்ள உழைக்கும் மக்களை மறந்து விட்டு, தோட்டங்களில் உள்ள காணிகளைப் பற்றி பேசி, பயிரிடப்படாத காணிகளை, புதிய முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்து கொடுக்க போவதாகப் நிதி அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வரவு - செலவுத் திட்ட உரையில் கூறியுள்ளார்.

நமது மக்களுக்குப் பயிரிடப்படாத காணிகள் தருவதாக எனக்கு நாடாளுமன்றத்தில் தந்த வாக்குறுதியை அவர் மறந்து விட்டார். அப்போது அவர் பிரதமர். இப்போது ஜனாதிபதி. ஆனால், நாம் மறக்கவில்லை. நுவரெலியா முதல் கொழும்பு அவிசாவளை வரை துன்பப்படும் நமது மக்களை, இந்த அலட்சியம் கொல்லாமல் கொல்கின்றது”

- என்றார்.

# 2023 வரவு செலவுத் திட்டம்: பொருளாதார நெருக்கடிகள் ஓரளவுக்கு

அமுலாகாது என்றும் அது வரையறுக்கப்பட்டதாக்க இருக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் வாழ்க்கை முறையை மீண்டும் நெருக்கடியில் வீழ்த்தி விடாமல் இருக்க நாம் சிந்தித்து செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை மேல், வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, திருகோணமலையிலும் பொருளாதார வலயங்கள் நிறுவப்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வாழ்க்கை முறைக்கு உகந்த வகையில் தனிநபர் வருமானத்தை அதிகரிக்க புதிய பொருளாதார முறைமை - ஜனாதிபதி

சுற்றுலாத்துறை அபிவிருத்திற்காக 50 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு - ஜனாதிபதி

8.3 வீதமாக உள்ள தேசிய வருமானத்தை 2025 ஆண்டில் 15 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை - ஜனாதிபதி

ஊவா வெல்லஸ பல்கலைக்கழகத்தில் புதிய மருத்துவ பீடமொன்றை நிறுவுவதற்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு - ஜனாதிபதி

பேராதனை, ருகுணு மற்றும் யாழ். பல்கலைக் கழகங்களில் முதுகலை மருத்துவப் பட்டங்களை ஆரம்பிப்பதற்கு 60 மில்லியன் ஒதுக்கீடு - ஜனாதிபதி

கிராமப்புறங்களில் உள்ள பாடசாலை அபிவிருத்திக்கு 200 மில்லியன் ஒதுக்கீடு. 1,000 கிராமப்புற பாடசாலைகளுக்கு இணைய வசதி - ஜனாதிபதி

தனியார் துறை ஊழியர்களுக்கான காப்பீட்டுத் திட்டம் மற்றும் சுகாதார காப்பீடு திட்டம் அறிமுகப் படுத்தப்படும. - ஜனாதிபதி

நன்னீர் மீன்பிடித் தொழில் அபிவிருத்திக்காக 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு - ஜனாதிபதி

மின்சாரம் போன்றவற்றுக்கான ஙஅகூ வரி விலக்குகள் மீளாய்வு நடவடிக்கைகளின் பின்னர் நீக்கப்படும் - ஜனாதிபதி

வறிய மற்றும் நலிவடைந்தவர்களை பராமரிப்பது குறித்து முழுமையான கவனம் செலுத்தப்படும் - ஜனாதிபதி

அரச சேவையை முழுமையாக மீளாய்வு செய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் - ஜனாதிபதி

2023 ஜனவரி 1 முதல் பல இறக்குமதி வரிகள் படிப்படியாகக் குறைக்கப்படும் அல்லது நீக்கப்படும் - ஜனாதிபதி

AL பரிட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் 75 பேருக்கு வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்தில் புலமைப்பரிசில் (ஜனாதிபதி நிதியிலிருந்து) - ஜனாதிபதி

ஒவ்வொரு பீடி சிகரெட்டுக்கும் 2 ரூபாய் வரி அறவிடப்படும் - ஜனாதிபதி

அடுத்த வருடத்தின் பிற்பகுதியில் அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அரசாங்கம் கணிசமான நிவாரணங்களை வழங்கும் - ஜனாதிபதி

சீர்திருத்தங்கள் / நவீனமயமாக்கலின் அடிப்படையில் சமூக சந்தைப் பொருளாதாரத்தின் மூலம் 77 - 87 உயர் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அடைய எதிர்பார்ப்பு - ஜனாதிபதி

கடவுசீட்டு மற்றும் விசா கட்டணத்தை உயர்த்துவதற்கு திட்டம் - ஜனாதிபதி

ஏற்றுமதிக்காக மட்டுமே கஞ்சாவை பயிரிடுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய நிபுணர் குழு நியமிக்கப்படும்

வழிபாட்டுத் தலங்களுக்கு சூரிய மின்கலன் வசதிகளை செய்வதற்கு நடவடிக்கை - ஜனாதிபதி

காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக் கழகத்தை அமைக்க 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு- ஜனாதிபதி

தேசிய மற்றும் மாவட்ட வைத்தியசாலைகளில் வார்டுகளுக்கு கட்டணம் செலுத்தும் முறை மீண்டும் அறிமுகப்படுத்தப்படும் - ஜனாதிபதி

குடிநீர் போத்தல்களுக்கான பாதுகாப்பு ஸ்டிக்கர் முறைமை அறிமுகப்படுத்தப்படும் - ஜனாதிபதி

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு

களஞ்சியத்தின்
விஸ்தீரணம்
1512 சதுர அடி.
நீளம் 42 அடி,
அகலம் 35
அடி, உயரம் 18 அடி.
அலுவலக அறை
170 சதுர அடி.
குளியல் அறை,
மலசலகூடங்கள் 02,
நீர் வசதி, மின்சார வசதி ,
போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில்
அமைந்துள்ளது)



அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.

தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# அருந்ததி

இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி
இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

25300 | வெ | 1975
யாழ்ப்பாணம் | இந்து
Germany | Manager
Diploma | அத்தம் (கன்னி)
179 செ.மீ

25273 | கோ | 1988
மாதகல் | இந்து | Canada
Tech Account Manager
சித்திரை (துலாம்) Degree
170செ.மீ | செவ்: 04

24448 | வெ | 1992
ஏழாலை | இந்து Sri Lanka
Tech Writer | B.eng
சதயம் (கும்பம்)
190 செ.மீ

25272 | வெ | 1978
யாழ்ப்பாணம் | இந்து | Switz
Volunteer Teacher
அஸ்வினி (மேடம்)
172 செ.மீ | செவ்: 01

25299 | வெ | 1997
வேலணை | Newzland
Admin Staff | B.eng
ஆயிலியம் (கடகம்)
189 செ.மீ | சு +செவ்: 04

25274 | வெ | 1994
யாழ்நகரம் | இந்து
Business | A/L
உத்தராடம் (மகரம்)
157 செ.மீ

25254 | வெ | 1978
மட்டக்களப்பு | Australia
Forklift Driver | Diploma
அஸ்வினி (மேடம்)
172 செ.மீ

25284 | வெ | 1989
திருகோணமலை | இந்து
Senior Software Engineer
Bsc | அத்தம் (கன்னி)
172 செ.மீ | சு + செவ்: 02

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

23341 | வே | 1955
கல்முனை | இந்து | Sri Lanka
Asst Accountant
Non RC | A/L
188 செ.மீ

25293 | வெ | 1994
முள்ளைத்தீவு | Venezuela
Development officer
Degree | மூலம் (தனுசு)
160 செ.மீ | சு + செவ்: 08

25303 | வெ | 1998
புத்தூர்முனை | Sri Lanka
Vocational Course
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ | செவ்: 02

24199 | வெ | 1990
நல்லூர் | இந்து | MBA
Junior Excutive Asst
ரோகிணி (இடபம்)
155 செ.மீ | செவ்: 07

25262 | வெ | 1998
கோண்டாவில் | இந்து | SL
Asst Project Manager
Bsc | மகம் (சிம்மம்)
187 செ.மீ | செவ்: 07

24283 | வெ | 1994
நெல்லியடி | இந்து | Divorced
Graduate Teacher
Bsc | ரேவதி (மீனம்)
160 செ.மீ | செவ்: 12

25284 | வெ | 1991
அல்வாய் | இந்து | Sri Lanka
Doctor | MBBS
பூரம் (சிம்மம்)
165 செ.மீ

23328 | வெ | 1994
உடுப்பிட்டி | இந்து | SL
Lecturer
Bsc | மூலம் (தனுசு)
162 செ.மீ

since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
வழங்கும்

## வரன் தேடுவோம் வாருங்கள்

ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மண-மக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்

**யாழ்ப்பாணம்**
**செல்வமஹால் 20-11-2022**

**கொழும்பு**
**தமிழ்ச்சங்கம் 27-11-2022**

இந்தியாவிலிருந்து
## பிரபல ஜோதிடர்
### பட்டுக்கோட்டை சுப்ரமணியன்

அவர்கள் நவம்பர் 20 முதல் 27 வரை இலங்கையில், உங்கள் ஜாதக பலன்களை அறிந்துகொள்வதற்கு

**நவம்பர் 20, 21, 22 யாழ்ப்பாணத்திலும்**

**நவம்பர் 24, 25, 26, 27 கொழும்பிலும்**



முன்பதிவு செய்ய அழையுங்கள்
**074 172 4524**

**அருந்ததி பிரைவட் லிமிட்டட் | +94 777 164 524**
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# பெற்றோர்களின் கவனம் பிள்ளைகள் மீது முழுமையாக இருக்கவேண்டும்





(மட்டு.துஷாரா)

மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துக்கொண்டு வருகின்ற இக்காலகட்டத்தில் பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகள் மீது முழுமையான கவனத்தினை செலுத்த வேண்டும் என கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் தொழில் பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி (திருமதி) ஜே.சுகந்தினி தெரிவித்தார்.

போதையற்ற மாணவர்கள் சமூதாயத்தை உருவாக்கல் என்ற தொனிப்பொருளில் இலங்கை காப்போம் நிறுவத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று மாலை (13) திருமலை வளாக சித்த மருத்துவ பிரயோக விஞ்ஞான பீட தொழில் நுட்பவியல் கருத்தரங்கு மண்டபத்தில் காப்போம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் (திலீப்) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைப்பது மட்டுமே பெற்றோர்களின் கடமையல்ல. தனது பிள்ளையின் கல்வி செயற்பாடுகளையும், அவர்கள் யார் யாருடன் நட்பு ரீதியான தொடர்புகளை வைத்துள்ளார்கள் என்பதையும் நன்கு அவதானிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் பிள்ளைகள் பிழையான நண்பர்களின் உறவினால் வழிதவறிச் செல்லும் நிலைமை ஏற்படுகின்றது.

பணம் சம்பாதிக்கும் நோக்கில் போதைப் பொருள் வியாபாரிகள் பாடசாலை மாணவ சமூதாயத்தைக்கூட விட்டு வைக்கவில்லை. அவர்களின் இந்த மோசமான செயற்பாடுகளுக்கு பழியாகுவது எமது பிள்ளைகளாகிய இளம் சந்ததியினராகும். எமது பிள்ளைகளை பாதுகாப்பது ஆசிரிய சமூகம் மாத்திரமல்ல என்பதை பெற்றோர்கள் புரிந்துகொண்டு தங்களின் பிள்ளைகள் மீது முழுமையான கவனத்தினை செலுத்துவது இன்றைய காலத்தின் தேவையாகும் என்பதை அனைத்துப்பெற்றோர்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்றார்.

இதன்போது, இலங்கை காப்போம் நிறுவத்தினால் ஏற்பாடில் திருமலை வளாக சித்த மருத்துவ பிரயோக விஞ்ஞான பீட தொழில் நுட்பவியல் வளாகத்தில் அதிதிகளினால் மரக்கன்றுகளும் நட்டு வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், சித்த மருத்துவ பிரயோக விஞ்ஞான பீட தொழில் நுட்பவியல் மாணவர்கள் ஒன்றியத்தின் தமிழறி தலைவர் தியாகராசா குகேந்தன், சன்சைன் முன்பள்ளி பாடசாலையின் பொறுப்பதிகாரிகள், இலங்கை காப்போம் நிறுவத்தின் செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# 'சமாதனமும் நல்லிணக்கமும்' இன நல்லுறவை பேணும் இளைஞர் கரங்களிலேயே..!



(அ . அச்சுதன் )



திருகோணமலை நகராட்சி மன்ற மட்டபத்தில் 13.11.2022 ஞாயிற்றுக்கிழமை அகம் மனிதாபிமான வள நிலையத்தின் கீழ் இயங்கி வரும் மாற்றத்துக்கான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் 'சமாதானமும் நல்லிணக்கமும்' எனும் தொணிப்பொருளில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா, பிரதி இணைப்பாளர் அழகுராசா மதன், திட்ட இணைப்பாளர் நாகேஸ்வரன் மிரேகா, திட்ட கணக்காளர் சஞ்சலிதா ஆகியோர் நிகழ்வை ஆரம்பித்து வைக்க நிகழ்வின் வளவாளராக கூ.கருணாகரன் அவர்களும் கலந்தது சிறப்பித்திருந்தார் .

இந்நிகழ்வில் மூவினங்களும் உள்ளடங்கலாக 30 இளைஞர் யுவதிகளின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமான நிகழ்வு குறித்து. மாற்றத்துக்கான இளைஞர் அமைப்பின் திட்ட இணைப்பாளர் கருத்து கூறுகையில்; இச் செயற்பாட்டின் ஊடாக மாவட்டத்தில் உள்ள தமிழ், முஸ்லீம், சிங்களம். ஆகிய மூவின இளைஞர் , யுவதிகளையும் ஒன்றினைத்து அவர்களிடையே இன நல்லுறவையும் புரிதலையும் ஏற்படுத்தி அவர்களூடாக சமூகத்தின் சகவாழ்வுக் கட்டமைபை ஏற்படுத்துவதற்கான முன்னெடுப்பாகவும், எதிர்காலத்தில் சிறந்ததொரு அரசியல் தீர்வுக்கான அடித்தளத்தினை ஏற்படுத்தும் நோக்குடனும் இவ் கருத்தரங்கு ஏற்பாடுசெய்யப்பட்டதாக குறிப்பிட்டார்..

# மறவன்புலோ ஐயப்ப ஆலய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்





(த.சுபேசன்)

தென்மராட்சி-மறவன்புலோ ஸ்ரீ ஐயப்ப தேவஸ்தான ஆலயத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டடம் ஒன்றிற்கான அடிக்கல் நாட்டு வைபவம் 09/11 புதன்கிழமை இடம்பெற்றது.

கனடாவைச் சேர்ந்த ஆறுமுகம் மோகன் அவர்களது 10இலட்சம் ரூபாய் நிதிப்பங்களிப்பில் அமையப்பெறவுள்ள குறித்த கட்டடத்திற்கான அடிக்கல்லை உரும்பிராய் கிழக்கு அண்ணமார் மகேஸ்வர ஆலய நிர்வாகத் தலைவர் தெ.விஜயகுமார், மறவன்புலோ ஐயப்ப ஆலய அறங்காவலர் நிமலரோகன் உள்ளிட்ட குருமார்கள் இணைந்து நாட்டி வைத்திருந்தனர்.

# கிழக்கில் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மாணவர்களுக்கு உதவ யுனிசேப் தயார்!

( வி.ரி.சகாதேவராஜா)



கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் UNICEF நிறுவனத்தின் அனுசரணையோடு, பொருளாதார நெருக்கடியினால் கற்றலில் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதற்காக கிழக்கில் உள்ள வலயங்களில் உடனடியாக தரவுகள் சேர்க்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண கல்வி திணைக்கள பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்துடன் யுனிசெப் பிரதிநிதிகள் நடாத்திய பேச்சு வார்த்தையின் பலனாக, குறித்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கப்படவுள்ளது.

இதற்கான தகவல்களை உடனடியாக அனுப்புமாறு கிழக்கு மாகாண கல்வி திணைக்கள கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்வி பணிப்பாளர் பி.நிமலரஞ்சன் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களையும் மின்னஞ்சல் ஊடாக அவசரமாகக் கோரியுள்ளார்.

பின்வரும் வகையான மாணவர்களின் தகவல்கள் கோரப்பட்டுள்ளன.

இடைவிலகிய/நீண்ட கால வரவின்மையை உடைய மாணவர்கள்.

தாய்/ தந்தையை இழந்த பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள்.

கடுமையான வறுமை கோட்டிற்கு கீழுள்ள மாணவர்கள்.

மேற்படி மாணவர்களுக்கு விரைவாக கற்றல் உபகரணங்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

ஏலவே ,கிழக்கு மாகாணத்தில் யுனிசெப் ஸ்தாபனம் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட கஷ்ட அதிகஷ்ட பிரதேச வகை 3 தர பாடசாலை மாணவர்களுக்கு வெண்தாள்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# சேவை நலன்பாராட்டி சித்தாண்டி ஊடவியலாளர் நல்லதம்பி நித்தியானந்தன் கௌரவிப்பு

(ந.குகர்தசன்)

அமரர் கா.மாரிமுத்தன் அவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவு தினமும் மாவடிவேம்பு தவசி லேணிங் சிற்றியின் ஆசிரியர் தின நிகழ்வு மற்றும் ஊடகவியலாளர் கௌரவிப்பும் நேற்று பிற்பகல் தவசி லேணிங் சிற்றியின் தலைவர் மா.அக்க்ஷயன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வுக்கு அதிதிகளை மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதுடன் மங்கள விளக்கேற்றப்பட்டு இறை வணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமாகியது. நிகழ்வுக்கு முதன்மை அதிதியாக ஓய்வுநிலை அதிபர் க.சத்தியவரதன் மற்றும் மா.தவராச அத்துடன் சிரேஸ்ட கணித ஆசிரியர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

கௌரவ அதிதியாக சித்தாண்டியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகவியலாளர் நல்லதம்பி நித்தியானந்தன் கலந்து கொண்டதுடன் ஊடகவியலாளரின் சேவை நலன் பாராட்டி ஊடகவியலாளருகன சிறப்பு கௌரவ விருதும் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் ஆசிரியர்கள் அதிபர்கள் கௌரவிக்கப்பட்டனர் அவர்களுக்கான நினைவுச்சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் நானிலம் கலைஞர் வட்டத்தின் கலைஞர்களுக்கும் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் தவசி லேணிங் சிற்றியின் முதல்வரினால் எழுதப்பட்ட 'இயற்கை அனர்த்தம்' தொடர்பான நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது. அத்துடன் குறித்த தவசி லேணிங் சிற்றியில் கல்வி பயிலும் மாணவர்களுக்குரிய பாடத்துடன் தொடர்புடைய நூல்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வும் நடைபெற்றது.

நிகழ்வில் உரையாற்றிய முதன்மை அதிதி அதிபர் மா.தவராஜா, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தவசி லேணிங் சிற்றியின் பங்களிப்பு முக்கிய பங்காற்றுகின்றது, கல்வியகத்தின் முதல்வர் ஒரு எழுத்தாளர் பல புத்தாகங்களை கல்விகற்கும் மாணவர்களின் நன்மை கருதி எழுதி வெளியீட்டு இருக்கின்றார். இந்நிகழ்வில் ஆசிரியர்கள் தொடக்கம் சித்தாண்டி ஊடகவியளார் நல்லதம்பி நித்தியானந்தன் உள்ளிட்ட பலரை அழைத்து கௌரவித்தமை சிறப்பானதொரு விடயமாகும் என தெரிவித்தார்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# கூட்டமைப்பை விபச்சார விடுதி என்று கூறியவர் மனநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார் உடனடியாக வாபஸ் பெற்று போதுமன்னிப்பு கேட்கவேண்டும்!

### சபை அமர்வில் காரைதீவு தவிசாளர் ஜெயசிறில் கண்டனம்!





**( வி.ரி.சகாதேவராஜா)**

தமிழ் தேசிய கூட்டமைப்பை விபச்சார விடுதி என்று ஒரு பாராளுமன்ற உறுப்பினர் வீட்டுக்குள் இருந்து கல்லெறிந்து இருக்கின்றார் .அவர் உண்மையில் மன நோயால் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடும். அவர் உடனடியாக அந்த கருத்தை வாபஸ் பெற வேண்டும் பொது மன்னிப்பு கேட்க வேண்டும் .

என்று காரைதீவு பிரதேச சபையின் 5%ஆவது மாதாந்த அமர்வு நேற்று(14) திங்கட்கிழமை நடைபெற்ற பொழுது தலைமை உரையாற்றிய பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கண்டனம் தெரிவித்து உரையாற்றினார்.

57 வது மாதாந்த சபை அமர்வு சபையின் ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

நேற்றைய சபையில் உறுப்பினர்களின் குடும்ப உறுப்பினர்களும் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் சிலரும் வருகை தந்திருந்தார்கள்.

அங்கு தவிசாளர் மேலும் உரையாற்றுகையில்... தமிழ் தேசிய கூட்டமைப்பு பாரம்பரிய மான கட்சி .தலைவரால் உருவாக்கப்பட்ட கட்சி. அந்த கட்சிக்குள் இருந்து கொண்டு அதனை விமர்சிப்பது என்பது கீழ்த்தரமானது. கேலிக்குரியது .அவர் வேண்டுமானால் அதிலிருந்து விலகி விட்டு விமர்சிக்கட்டும். ஆனால் உள்ளுக்குள்ளே இருந்து இந்த விமர்சனத்தை செய்வது தனது தாயை ஒரு விபச்சாரி என்று சொல்வது போன்று. எனவே அவரது அந்த கருத்தை வன்மையாக கண்டிக்கிறேன்.. என்றார்.

# அப்துல் மஜீத் அவர்களின் 35 வது நினைவு தினம்..!





**(அ . அச்சுதன்)**

திருகோணமலை மாவட்ட முன்னாள் பிரதியமைச்சர் மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீத் அவர்களின் 35வது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு மௌன அஞ்சலியும், அவரது ஈடேற்றத்திற்கான துஆ பிரார்த்தனையும் மூதூரில் ஞாயிற்றுக்கிழமை (13) இடம்பெற்றது.

இந்நிகழ்வு மூதூர் அல் அத்பால் சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வை அவரது மூதூர் நலன் விரும்பிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீத் நினைவு கவிதை வெளியீட்டு வைக்கப்பட்டது. மேலும் அல் அத்பால் சிறுவர் இல்ல மாணவர்களுக்கு மதிய போசனமும் வழங்கி வைக்கப்பட்டன.

முன்னாள் பிரதியமைச்சர் மர்ஹூம் ஏ.எல். அப்துல் மஜீத் அவர்கள் , முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் அவர்களின் தந்தை என்பதும் குறிப்பிடத் தக்கது.

# இந்திய தூதரகமும் கிழக்கு சுதேச வைத்திய திணைக்களமும் இணைந்து திருமலையில் நீரிழிவு தோடர்பான விழிப்புணர்வு கண்காட்சி!







**(அ . அச்சுதன் , வ. ராஜ்குமார் )**

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் இணைந்து தள ஆயுர்வேத வைத்தியசாலை கப்பல் துறை திருகோணமலை ஊடாக நடத்தும் சர்வ தேச நீரிழிவு தினம் தொடர்பான விழிப்புணர்வு கண்காட்சி நிகழ்வு இன்று 14ம் திகதி திருகோணமலை நகரசபையின் மண்டபத்தில்நேற்று ஆரம்பமானது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் யாழ்ப்பாண அலுவலக துணை தூதர் ராகேஷ் நடராஜ் அவர்கள் கௌரவ விருந்தினராக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் சிறப்பு விருந்தினராக கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் ஆணையாளர் திருமதி.ஆர்.ஸ்ரீதர் மற்றும் திருகோணமலை நகராட்சி மன்ற செயலாளர் வெ.இராஜசேகர் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் நீரிழிவு நோய் பற்றிய சுதேச மருத்துவ விளக்கமும் நோய் தொடர்பாக ஆலோசனைகள் காட்சிப்படுத்தலும் நீரழிவு நோய்க்கான இரத்தப் பரிசோதனை , பாரம்பரிய உணவு முறை தொடர்பான காட்சிப் படுத்தல் , மூலிகை தாவரங்களின் காட்சிப்படுத்தலும் விற்பனையும் ஆகியன இடம் பெற்றது.

நேற்று 14 மற்றும் இன்று 15 அகிய இரண்டு தினங்கள் இந்த நிகழ்வு இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தின் அதிரடியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

**(த.சுபேசன்)**



சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தின் அதிரடியான நடவடிக்கை காரணமாக 13/11 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கொடிகாமம்-பாலாவி பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு - உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பெருமளவான உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலாவி மயானத்தை அண்டிய காட்டுப் பகுதியில் கடந்த 4மாத காலமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர்கள் தப்பித்துள்ள நிலையில் ,1100லீட்டர்கோடா,58லீட்டர்ஸ்பிரிட், செப்புச் சுருள்-04, 6 பரல்கள் ஆகியன மதுவரித் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் றோஷான் பெரேராவின் வழிநடத்தலில்,

சாவகச்சேரி மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ஆ.ராஜ்மோகன் தலைமையிலான மதுவரி சார்ஜன் மேஜர் மகேஸ்வரன்,மதுவரி ஹோப்ரல் விஜயரூபன், தேவகர்ணன் ஆகியோர் அடங்கிய குழுவினர் குறித்த முற்றுகை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் வேலைத்திட்டம்





**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

நுவரெலியா மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட திடீர் அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த குடும்பங்களின் பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடசாலை உபகரணங்கள் வழங்கும் வேலைத்திட்டத்தை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அந்த வேலைத்திட்டத்தின் கீழ் நுவரெலியா மற்றும் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணப் பொதிகள் விநியோகம் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் கொட்டக்கலை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்பத்தில் இடம்பெற்றது.

இந்த உபகரணப் பொதிகளின் ஒவ்வொன்றும் மொத்தப் பெறுமதி 12000 ரூபா என்பதுடன், நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் 102 சிறுவர்களுக்கும் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் 51 சிறுவர்களுக்கும் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க நுவரெலியா மாவட்ட நிர்வாக அதிகாரி ஆர்.எஸ்.சந்திரசிறி, நிருவாக கிராம உத்தியோகத்தர்கள், அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அதிபர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# சேந்நேல் சாஹிராவில் உ கோடி ரூபா சேலவில் கணித ஆய்வுகூடம்!





**( வி.ரி. சகாதேவராஜா)**

கல்வி அமைச்சின் GEMP நிகழ்ச்சி திட்டத்தின்கீழ், சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட சம்மாந்துறை செந்நெல் சாஹிரா கல்லூரியில் கணித ஆய்வுகூடம் அமைக்கப்பட்டு வருகிறது .

இதற்கென 2 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இரண்டு மாடியாக அமையவுள்ள இந்த ஆய்வுக்கூடத்தில், முதல் மாடிக்காக இந்த இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எஸ் .எம் .எம் .அமீர் இதற்கான அடிக்கல்லை அண்மையில் நட்டு வைத்தார்.

கல்லூரி அதிபர் யூ.கே. எம் .இஸ்மாயில் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்வி அதிகாரிகள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 23

# மூத்த பல்துறை எழுத்தாளர் கலாபூணம் அருணாசலம் அரசரெத்தினம் கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்.

**எழுத்திலக்கண முறைகளைப் பின்பற்றி பல்வேறு வகையான இலக்கிய கலை வடிவங்களை படைப்பவர்கள் எழுத்தாளர்கள் ஆவர். கருத்துக்களை நன்றாக வெளிப்படுத்தும் விதத்தில் மொழியைப் பயன்படுத்தக்கூடிய திறமையான எழுத்தாளர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த பல்வேறு வகையான இலக்கிய வகைகளிலிருந்து தேர்வு செய்து சமூகத்துக்கு தேவையான, அவசியமான விடயங்களை தங்களது எழுத்துக்கூர்மையால் படைத்து வருகின்றனர். அவ்வகையில், எழுத்திலக்கியத் துறையில் 50வருடங்களுக்கு மேலாக கலைச் சேவையாற்றி வருபவரான மூத்த பல்துறை எழுத்தாளர் கலாபூணம் சிவஸ்ரீ அருணாசலம் அரசரெத்தினம் கலைஞர் சுபீட்சம் பத்திரிகையின் திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை என்ற பகுதிக்கு வழங்கிய செவ்வி காணலை இங்கு காணலாம்.**

**? உங்களைப் பற்றிய அறிமுகம்?**

திருக்கோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கு சேனையூர் 6ஆம் வட்டாரத்தில் 1944ஆம் ஆண்டு அருணாசலம் வள்ளியம்மை தம்பதிகளுக்கு மூன்றாவது மகனாகப் பிறந்து, ஆரம்பக்கல்வியை மருதடிச்சேனை மெ.மி.பாடசாலையில் பயின்று பின் சேனையூர் மத்திய கல்லூரியில் கல்வி கற்று இடையில் நிறுத்தி விடும் சூழல் ஏற்பட்டதால் முழுமையாக கல்வியை தொடர முடியாமற் போய்விட்டது துரதிஸ்டம். ஆனாலும் எனது பெரு முயற்சியினாலும், எனது துணைவியான அன்னலெட்சுமியின் அயராத தூண்டுதலினாலும் சம்பூர் காளியம்பாளின் அருட்கடாட்சத்தினாலும் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக 1965இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று 196% ஆம், 1968ஆம் ஆண்டு காலங்களில் கிளிநொச்சி விவசாயப் பாடசாலையில் ஒரு வருட தொழிற்பயிற்சி பெற்றதன் பின் இலங்கை போக்குவரத்து சபையில் நடாத்துநராகக் கடமையாற்றியதுடன் திறமை அடிப்படையில் சாலை வீதிப் பரிசோதகராகவும் தெரிவு செய்யப்பட்டு கடமை செய்ததுடன் கிராம சேவையாளராக சிறிது காலம் பதவி வகித்தமையும் நான் பார்த்த தொழில்கள். இன்று வரை சேனையூர் ஸ்ரீ நாகம்பாள் கோயிலில் பிரதம பூசகராக தொடர்ந்து பூஜை செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. எனது கல்வி, கலை இலக்கிய செயற்பாடுகள், எனது வாழ்க்கை மனைவி, மக்கள், பெற்ற பெருமைகளுக்கெல்லாம் சம்பூர் காளி தேவியின் கருணையேயன்றி வேறொன்றுமில்லை. என்னை கைதூக்கி விட்டவள் காளியே!

**? எழுத்துத் துறையில் ஆர்வம், அதன் பயணம் குறித்து?**

1960களில் இலங்கையில் புகழ்பெற்ற எழுத்தாளரான எஸ்.டி.சிவநாயகம் அவர்களால் வெளியிடப்பட்ட தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகையையும் ஏனைய பல பத்திரிகைகள், சிறுகதை, நாவல்களையும் எமதூர்சன சமூக நிலைய வாசிகசாலையில் வாசிக்கும் பழக்கம் எனக்கு ஏற்பட்டிருந்தது. இதனால் எழுத்துத் துறையிலான ஆர்வம் மிகுந்தது. தினபதி கவிதா மண்டலப் பகுதியில் பால பாரதி அவர்களால் நடாத்தப்பட்ட பாசறையில் அங்கத்துவம் பெற்று கவிதைகளை எழுதி மூத்த கவிஞர்களின் பரிந்துரையுடன் அனுப்பி கவிதைகள் வெளிவர தொடங்கியதால் மென்மேலும் எழுத வேண்டுமென்ற ஆர்வப் பயணம் இன்று வரை தொடர்ந்து செல்கிறது.

**? இதுவரையில், நீங்கள் எழுதி வெளியிட்ட இலக்கியப் படைப்புகள் குறித்து?**

நான் எழுதிய இலக்கியப் படைப்புகள் அனேகமாக இலங்கையில் இருந்து வெளிவந்ததும், வருவதுமான வீரகேசரி, தினகரன், தினக்குரல், தினமுரசு, சுடர் ஒளி, தமிழ்தந்தி, மலை முரசு, உதயன், தமிழ் மிரர், தினபதி, சிந்தாமணி, மித்திரன் ஆகிய பத்திரிகைகள் மூலம் கவிதை, கட்டுரை, சிறுகதை, துணுக்குகள் சமயம், சோதிடம், சமூகம் சார்ந்ததுமான ஆக்கங்களையும் எழுதி வெளியிட்டதோடு பொலி சஞ்சிகையிலும் எழுதியுள்ளேன். புத்தகங்களாக, ''எதிர் நீச்சலடிப்போம் ஏமாறாமல் இருப்போம்'' என்ற கவிதைத் தொகுப்பினையும், ''ஏக்கம்'' என்ற கவிதைத் தொகுப்பினையும் படைத்துள்ளேன். மேலும் பல நூற்றுக்கணக்கான ஆக்கங்களை எழுதி தட்டச்சு செய்து வைத்துள்ளேன். அவற்றை புத்தகமாக்க முடியாத நிலை தற்சமயம் ஏற்பட்டுள்ளது.







காரணம் பொருளாதார வளம் போதாமையே எனலாம்.

**? கவிதை, கட்டுரை, சிறுகதை, சோதிடம் என எழுத்துத் துறையில் பரிணமித்து செல்லும் பல்துறைக் கலைஞரான உங்களின் இன்றைய கலைச் செயற்பாடுகள் குறித்து?**

கிழக்கு மாகாண முதலமைச்சரினால் பல்துறைக் கலைஞர் என்ற விருதுக்கு பாத்திரமாகி கலைச் செயற்பாடுகளை இன்று வரை நிறைவேற்றி வருவதில் முன்னிலையிலையே உள்ளேன். வெளிவருகின்ற பத்திரிகைகள் பக்கங்களை தற்சமயம் குறைத்து செயற்படுவதை காண முடிகிறது. இதனால் பல ஆக்கங்கள் வெளிவராமலே போகிறது துரதிஸ்டமே.

**? இன்று பலரும் எழுத்துத் துறையில் தங்களை அடையாளம் காட்டி வருகின்றனர். அவ்வகையில், உங்களது அனுபவத்தினூடாக, எழுத்துத் துறையில் கைக்கொள்ளும் உத்திகள் குறித்து?**

எழுத்துத்துறை முன்னரை விட பரவலாகி வருவது என்னவோ உண்மைதான். இத்துறையில் ஈடுபாடு கொண்டு இலக்கியப் பணியை தாங்கள் எடுத்துக் கொண்ட கொள்கையின்படி பல சிரமங்களுக்கு மத்தியில் எழுத்தாளர்கள் வாசகர்களை சென்றடைய வைப்பதும் நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது. அவரவர் எழுத்தார்வம் வாசகர்கள் வரவேற்பினாலேயே மேலோங்கும். இதற்கமைய வாசிப்பை நேசிக்கவும். எளிய முறையில் எல்லோரும் விளங்கிக் கொள்ளும் இலகுத் தமிழில் எனது படைப்புக்களை பதிவு செய்கின்றேன்.

**? திருக்கோணமலை மண்ணில் மூத்த கலைஞர்களுக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது?**

பொதுவாக மூத்த கலைஞர்கள், இளங் கலைஞர்கள் என எந்தப் பாகுபாடும் என்னைப் பொறுத்த மட்டில் கூறமுடியாதுள்ளது. அவரவர்கள் கலை இலக்கிய ஆளுமைத் திறமையே கலைஞர்களை கைதூக்கி விடும். எமது மாவட்டத்தில் பலதரப்பட்ட கலைஞர்கள் உருவாகியுள்ளதையும், கலை இலக்கியச் சேவையை திறம்படச் செய்வதும் பொதுமக்கள் அறியாததல்ல. கலைஞர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் அவர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும். அப்போதுதான் கலைஞர்கள் மனம் களிப்படையும். மாகாண ரீதியில் கலைஞர்களை மதித்து பண்பாட்டு திணைக்களத்தினால் மாதாந்த ஓய்வூதியமாக தகுதியான கலைஞர்களுக்கு வழங்கி வரும் மூவாயிரம் ரூபாய் தற்போதுள்ள நிலையில் போதுமானதாக இல்லை இதனை ஐயாயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க அரசும், அதிகாரிகளும் ஆவணம் செய்தால் கலைஞர்களுக்கான வரவேற்பு நிறைவாகும் எனச் சொல்லலாம்.

**? நம் நாட்டின்' பாரம்பரிய கலைகள் மருவி அடைந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது' அது குறித்து உங்களின் கருத்து?**

பாரம்பரியமிக்க கலைகள் மருவிச் செல்வது என்னவோ உண்மைதான் ஆனாலும் தற்போதுள்ள நவீனத்துவ செயற்பாடுகளால் முற்று முழுதாக நமது பண்டையக் கலைகளை மறைத்து விட முடியாது. ஆங்காங்கே இன்னும் அவைகள் தலைதூக்கிய வண்ணம் செயற்படவே மிளிர்கின்றன.

**? உங்களது மூதூர் பிரதேசத்தில் பல்வேறு துறைசார் கலைஞர்களின் வருகையும், ஈடுபாடும் எவ்வாறு உள்ளது?**

இடறி விழுந்தாலும் எழுமோசை இசையாகவே எழும். கலையாடும் கட்டைபறிச்சான் மூதூர் பிரதேசத்தில் கவிதையாகவே எனக்கு தோன்றும் மூதூர் கிழக்குப் பிரதேசங்களில் கூத்துக்களை பழக்கி அரங்கேற்றிய சேனையூர் அண்ணாவியார் கணபதிப்பிள்ளை கட்டைபறிச்சான் முருகப்பண்ணாவிமார் மறைந்தும் அவர்களது புலமைத்துவம் இன்னும் வாழவே செய்கின்றது. இயல், இசை, நாடகங்களை அருகவிடாமல் இன்றும் இம் மண்ணின் மைந்தர்களான பால சுகுமார், இரா. இரத்தினசிங்கம், கட்டைபறிச்சான் கனகசிங்கம், பொலி சஞ்சிகை ஆசிரியர் மதுரன், கட்டை பறிச்சான் நவரெத்தினராஜா ஆகியோர்களும் திருமதி. உமாரதீஸ்வரன், திருமதி.இராகினி, சசீதரன் ஆகியோர்களும் கலாபூஷணம் விபுணசேகரம், காளிராசா போன்றோர் கலைஞர்களாக இன்றும் பவனி வருகின்றார்கள். மறைந்த கலைஞர் வில்லுப்பாட்டு வீரசிங்கம் அவர்களது கலை இலக்கிய சேவைகளை என்றும் மறக்கவே முடியாது. வில்லுப்பாட்டு வீரசிங்கம் அவர்களது குழுவில் நானும் ஒருவன் என்ற காரணத்தால் 196%,1968களில் கிளிநொச்சி விவசாயப் பாடசாலையில் உழைப்பாளியர்கள் தோனி கந்தசாயி என்ற விவசாய கறையை முதன்மைப்படுத்தி வில்லுப்பாட்டை தயாரித்து இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஊடாக 30 நிமிடம் வரை ஒலிபரப்பு செய்ததை இன்றும் நான் நினைவு கொள்கின்றேன். கலை, இலக்கிய பேரார்வம் கொண்ட பல்வேறு தரப்பட்ட கலைஞர்கள் வாழும் பிரதேசமான முதூர் கிழக்கு கலைஞர்கள் நிறையவே வாழுமிடம் என்றால் மிகையல்ல.

**? எழுத்துத்துறை செயற்பாட்டில் உங்களது குடும்பத்தின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது?**

எனது எழுத்துப் பணிக்கு பொதுவாக காலஞ் சென்ற எனது மனைவி அன்னலெட்சுமி, மூத்தமகள் ஆனந்தி, என்மகன் எழுத்தாளர், ஊடகவியலாளர் அச்சுதன், இளையமகள் அங்கயற்கண்ணி, மருமக்கள் மார்கள் அனைவரும் தூண்டுகோலாக இருந்து வருவது நான் செய்த பாக்கியம் என்றே கருதுகின்றேன்.

**? கலை மன்றங்களிலும், சமூக சேவை அமைப்புகளிலும் உங்களது பங்களிப்பு எவ்வாறு உள்ளது?**

இந்து சமயம் சார்ந்த கோயில் சபைகளிலும், (எமதூரிலுள்ளவை) மூதூர் கலாசார திணைக்களத்தின் கொட்டியாரப்பற்று இந்து சமய ஒன்றியத்திலும் ஆலோசகராக இருந்து வருகின்றேன்.



தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 23

# மூத்த பல்துறை எழுத்தாளர் கலாபூணம் அருணாசலம் அரசரேத்தினம் கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்.

அவ்வப்போது அவை சார்ந்த வளர்ச்சிகள் பற்றி ஆலோசனை செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

**? திருக்கோணமலை மாவட்டத்தில் கலைத் துறையிலுள்ள இடர்பாடாக நீங்கள் கருதுவது?**

நமது மாவட்டத்தில் கலைத்துறையிலுள்ள இடர்பாடாக பலதரப்பட்ட குறைகள் இருந்தாலும் கலைகளை வளர்ப்பவர்களை விட ரசிப்பவர்களின் ஈடுபாடுகள் பரவலாக வளர்வதிலேயே கலை வளர்ச்சி மேலோங்கிக் காணப்படும் என்றே நான் நினைக்கின்றேன்.

**? இலக்கியத் துறையில் உங்களது எதிர் கால படைப்புகள் குறித்து?**

கரை காண முடியாத கலை இலக்கியப் பெருங்கடலில் பொதிந்து கிடக்கும் கலை பொக்கிஷங்கள் கணக்கிட முடியாதவைகள் நிறையவே உள்ளதை கற்றறிந்த புத்திஜீவிகள் நன்கறிவர். நானும் எனது புலமைக்கு எட்டிய வரையில் புதிது புதிதாக இலக்கியப் படைப்புக்களை பதிவு செய்து ஆவணப்படுத்த விரும்புகின்றேன். ஏற்கனவே கவிதைகள், கட்டுரைகள், சமய கழகங்கள் தொடர்பாக எழுதியவற்றை நூலுருவாக்க முயற்சி செய்து வருகின்றேன். காவியம், கும்மி பதிகம் என்பன ஆன்மீகத் தொடர்புடையவைகள். தட்டச்சு செய்து புத்தகமாக்க தயார் நிலையில் உள்ளது.







எதற்கும் தேவை நிதி. நிதி கிடைக்கும் பட்சத்தில் புத்தகமாகப் பூத்துக் குலுங்கும்.!

**? கலைத் துறையில் நீங்கள் பெற்ற விருதுகள் குறித்து?**

கலைத்துறையில் எனது புனைப் பெயர்களாக சேனையூரான், கவிக்குயிலோன், உண்மை விளம்பி, மூதூர் கிழக்கான் ஆகியவைகள் பிரபல்யம் பெற்றவை. சிவஸ்ரீ அரசரெத்தினம் என சொந்தப் பெயரிலும் எழுதுவதுமுண்டு. இப்பெயர்களுடன் பல வெற்றிப் பாராட்டுச் சான்றிதழ்களையும், விருதுகளையும் பெற்றுள்ளேன். அவ்வகையில், 2011இல் கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது, 2014இல் கலாபூஷணம் விருது, 2015 இல் சமூகதீபம், கலைமாமணி தேசிய விருது, 2019இல் கலைத்துவ ஆளுமையாளர் விருது, பொற்கிளி விருது, 2021இல் பொற்கிளி விருதும் இதுவரையில் பெற்றுள்ளேன்.

**? நிறைவாக, எழுத்துத் துறையில் சாதித்துக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு கூற விரும்புவது?**

இளந்தலைமுறையினர் எழுதுகிறார்கள். எழுதும் அளவுக்கு ஒரு சிலரைத் தவிர பலர் வாசிப்பதை நேசிப்பது குறைவு. மரபுக் கவிதையை நன்றாக கற்றால் தான் புதுக்கவிதைகளை புனைய இலகுவாகும். தொலைக்காட்சி, கைத்தொலைபேசிகள் அதிகரித்த பின் வாசிப்புப் பழக்கம் அருகிக் கொண்டு வருவதை நிராகரிக்க முடியாது. மேல் நாட்டவர்கள் நிறையவே வாசிப்பதில் முன்னணியில் நிற்கிறார்கள். ஹரிப்பொட்டர் நூல் லட்சக்கணக்கில் பிரசுரமாகி விற்கப்படுகிறது என்பதை அறிய முடிகிறது. நமது நூல்களை வாங்கிப் படிப்பவர்கள் அருகிக் கொண்டு வரும் விடயம் கவலைக்குரியது. வாசிக்கவும், சிந்திக்கவும், எழுதவும் வேண்டும். திருமலை மாவட்டத்தில் பல எழுத்தாளர்கள் உள்ளனர். அவர்கள் எழுதியும் வருகின்றனர். அவற்றைப் பெற்று வாசித்து நமது இளம் சமுதாயத்தினர் வளர்ச்சியடைய வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன். இறுதியாக, வாசித்து வாசித்து அறிவை வளர்ப்பதும், யோசித்து யோசி




த்து முடிவெடுப்பதும் நம்மை பிரகாசிக்க வைக்கும் என்பது திண்ணம். எனக் கூறிக் கொண்டு எம் போன்ற மூத்த கலைஞர்களுக்கான களத்தினை 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை' என்ற பகுதியின் ஊடாக வாய்ப்பளித்து வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு இப்பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

**நன்றி!**




**மூத்த எழுத்தாளராக தனக்கென்று ஓர் அடையாளத்தைக் கொண்டு தான் பிறந்த மண்ணிற்கு மட்டுமல்லாது நம் திருக்கோணமலை மாவட்டத்திற்கே அளவில்லா புகழையும், பெருமையையும் தேடித் தந்த இக் கலைஞர் மென்மேலும் பல படைப்புகளைப் படைத்து உலகளவில் கலைச்சேவை ஆற்றி விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற்று தேகாரோக்கியத்துடன் இருப்பதற்கு இறைவனைப் பிரார்த்திப்பதோடு இப்பணித் தொடர மனதார வாழ்த்துகின்றேன்.**


**தொடரும்.....**


**கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**
**திருமலை தட்சாயினி ஞானசங்கரன்**



# அரசியல் மயமான கல்முனை காணிப்பதிவகம்?


[redacted]
Application to receive Information


பிரதேச செயலகம் – கல்முனை
DIVISIONAL SECRETARIAT – KALMUNAI


REGISTRAR GENERAL'S DEPARTMENT
LAND AND DISTRICT REGISTRY - KALMUNAI
M.A.JAMAL MOHAMED
Registrar of Lands
Additional District Registrar
Kalmunai.

**-கேதீஸ் -**

கல்முனை காணிப் பதிவகத்தின் செயற்பாடுகள் அரசியல் வாதிகளின் நிகழ்ச்சி நிரலின்கீழ் செயற்பட்டு வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது. இங்குதமிழர் விரோதப் போக்கு தெட்டத்தெளிவாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கல்முனை இரண்டு பிரதேச செயலகங்கள் இயங்கிவரும் 58 கிராம சேவகர் பிரிவுகளை கொண்ட பிரதேசம். 2013.01.01 முதல் 2022.04.25 வரை பதிவாளர் திணைக்களத்தின் பதிவுப் பிரிவுகளை மீளமைத்தல் நடவடிக்கையின்கீழ் தனித்தனியான பிரதேச செயலகப் பிரிவுக்குண்டான நடைமுறைகளை பயன்படுத்தி கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குரிய காணி பதிவு நடவடிக்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

2022.04.25 பின்னர் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குரிய காணி பதிவு நடவடிக்கள் கல்முனை பிரதேச செயலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதாக கல்முனை காணிப்பதிவகம் தெரிவித்திருந்து. இது தொடர்பில் உள்ள பின்னணியை ஆராயும்பொருட்டு தகவல் அறியும் உரிமை சட்டத்திற்கூடாக அமைப்புகளாலும், தனி நபர்களாலும் பெறப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் கல்முனை பிரதேச செயலாளரும், கல்முனை காணிப் பதிவாளரும் வடக்கு பிரதேச செயலகத்தின்கீழ் வசிக்கும் பொதுமக்கள் நியமமான, நியாயமான அரச சேவையை பெறுவதில் தடையேற்படுத்தியுள்ளதுடன் அதிகார துஷ்பிரயோகங்களிலும் ஈடுபட்டு வருவதை அறிய முடிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேரடியாக பதிவாளர் நாயகத்தின் கட்டளைப்படி செயலாற்ற வேண்டிய கல்முனை காணி மாவட்ட பதிவாளர் காரியாலயம், கல்முனையில் ஒரு தனியார் வைத்தியசாலை பிறப்பு, இறப்பு பதிவுகளை பதிவது தொடர்பில் பிழையான வழிநடத்தலை மேற்கொண்டு உயர் அதிகாரியொருவரின் கட்டளைப்படி பணியாற்றியிருப்பது தெரியவந்துள்ளது. ஒரு விடையம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறின் அது தொடர்பில் பதிவாளர் நாயகத்தின் ஆலோசனை பெறப்பட்டே நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய நிலையில் செயற்பாடானது ஒரு திணைக்களத் தலைவருக்கு சற்றும் பொருத்தமில்லாத பக்கச்சார்பான நடவடிக்கை என உறுதிபடத்தெரிவதாக பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் உயர்அதிகாரியின் தமிழர் விரோத, அரசியல் கட்சி சார்ந்த செயற்பாடுகள் குறித்து நீதியான விசாரணைக்கு உத்தரவிடக்கோரியும், இவர் இக்காரியாலத்தில் தொடர்ந்தும் நீடிப்பாராயின் தமிழர்களின் ஆவணங்களுக்கு ஆபத்துகள் ஏற்படுத்தப்படக்கூடிய வாய்ப்புகளை சுட்டிக்காட்டியும் கல்முனை மாவட்டப் பதிவகத்திற்கு இன முரண்பாடுகளை தோற்றுவிக்காத வகையில் அரச நியமங்களுக்கு அமைவாக பணியாற்றக்கூடய பதிவாளரொருவரை நியமிக்கக் கோரியும் பதிவாளர் நாயகம் மற்றும் கிழக்கு வலயத்தின் பரதிப் பதிவாளர் நாயகம் ஆகியோருக்கு சிவில் அமைப்புக்கள் தமது கோரிக்கைகளை அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சேங்கலடியில் சிறுவர் மேம்பாட்டு விழா









**(ஏறாவூர் நிருபர் - நாஸர்)**

அனைத்துலக தமிழர் மேம்பாட்டு நிதியம் மற்றும் தேசிய ஒருங்கிணைந்த புனர்வாழ்வு அபிவிருத்தி அமைப்பு ஆகிய நிறுவனங்கள் இணைந்து ஏற்பாட்டு செய்த சிறுவர் மேம்பாட்டு விழா மட்டக்களப்பு - செங்கலடி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் மற்றும் கிழக்குப்பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் ஆகியோர் இவ்விழாவில் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

சமூக ஊடகங்கள் பாடசாலை மாணவர் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கம் , போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் சமூக சீரழிவுகள், சிறப்பான கல்வியைப்பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் போன்ற விடயங்களில் விழிப்புணர்வூட்டும் பல்வேறு நாடகங்கள் இங்கு அரங்கேற்றப்பட்டன.

செங்கலடி மத்திய கல்லூரி, கோரகல்லிமடு ரமண ரிஷி வித்தியாலயம், முறக்கொட்டாஞ்சேனை ராமகிருஷ்ண வித்தியாலயம் மற்றும் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்கள் நாடகங்களில் பங்கேற்றனர்.

தேசிய ஒருங்கிணைந்த புனர்வாழ்வு அபிவிருத்தி அமைப்பின் தலைவர் முனைவர் எஸ். தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிழக்குப்பல்கலைக்கழக பதிவாளர் ஏ. பகிரதன் மற்றும் நிறுவனங்களின் திட்ட இணைப்பாளர்களான விக்னேஸ்வரன் சுதர்ஷன் மற்றும் மருத்துவர் வீ. சச்சிதானந்தன் ஆகியோரும் விசேட அதிதியாகக் கலந்துகொண்டனர்.

சமீபத்தில் கிழக்கு மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் நடாத்தப்பட்ட கல்வி மற்றும் புறக்கிருத்திய செயற்பாடுகளில் வெற்றியீட்டிய பல மாணவர்கள் இங்கு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கியுடன் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கைது



**(எப்.முபாரக் )**

கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரஜ வெவ பகுதி வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் டி56 துப்பாக்கி ஒன்றுடன் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் ரஜ வெவ பகுதியைச் சேர்ந்த 3% வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவது.

குறித்த நபர் அக்போபுர பொலிஸ் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றி வந்தாகவும் தெரியவதுள்ளது.

கூ56 துப்பாக்கியின் பாகங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட புதிய துப்பாக்கி மற்றும் கூ56 துப்பாக்கிக்கு பயன்படுத்தப்பட்ட இருபத்தொரு தோட்டாக்களுடன் சந்தேக நபரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அக்போபுர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபரின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கூ56 துப்பாக்கியை போன்று வடிவமைக்கப்பட்டுள்ள இந்த துப்பாக்கி கூ56 தோட்டாக்களை பயன்படுத்தி இரவு வேளைகளில் விலங்குகளை வேட்டையாட பயன்படுத்தப்பட்டதாக பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டுவருவதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## முதலாவது சட்டத்தரணியாக பதவியேற்ற ரமணன் தேவராஜ் கௌரவிப்பு



**(எப்.முபாரக்)**

திருகோணமலை வரோதையநகரின் மைந்தன் முதலாவது சட்டத்தரணியாக பதவியேற்ற ரமணன் தேவராஜ் அவர்களை லயன்ஸ் கழகத்தினர் வரோதையநகர் பாரதி வித்தியாலயத்தில் வைத்து அவரது பெற்றோர் முன்னிலையில் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கி (13) கௌரவித்த போது பிடித்த படம் .

**படம்:எப்.முபாரக்**


## அடைமழையிலும் பெரும் போக பயிர்ச்செய்கை மும்முரம்

**(எப்.முபாரக்)**

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் நீர்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பெரும் போக வேளாண்மை பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இம் மாவட்டத்தில் கந்தளாய், மூதூர், கிண்ணியா ,தம்பலகாமம், மற்றும் வான் ஏல, போன்ற இடங்களில் பயர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கந்தளாய் குளத்தின் நீரை பயன்படுத்தி பதினாறாயிரத்து என்றூறு ஏக்கர் நெற் பயிர்ச்செய்கை நவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.



இதில் வயல் அடித்தல், வரம்புகட்டுதல், விதைத்தல், போன்ற

நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

விவசாயிகள் அடை மழை என்றும் பாராமல் விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.